ரிஜிஸ்டர்ட் நெ.—2197 போஸ்ட் பாக்ஸ் நெ. 346. டெலிபோன் நெ[illegible]

தஞ்சை ஜில்லா மகாநாடு விவரம்.

திராவிடன்

நாடோறும் வெளிவருவது

[illegible] வில் [illegible] ஊர்வலம் தாக்கப்பட்டது.

VOL X பு. 10 ஆசிரியர்:—திரு. சனக-சங்கர கண்ணப்பர். [இதழ்—361

சென்னை பிரபவ-ஹூ சித்திரை-மீ 27உ — 1927-ஹூ மே-மீ 9உ திங்கட்கிழமை

"திராவிடன்"

பிராமணரல்லாதார் விடுதலைக்கு உழைப்பது.

கிடைக்கும் இடங்கள்.

திருநெல்வேலி.
திரு எம். சோமசுந்தரமவர்கள்
டி. பி. முத்தையா [illegible] திருநெல்வேலி ஜங்ஷன்.

மதுரை
டி. சேதுராயர் அவர்கள் [illegible] மதுரை.

திருச்சினாப்பள்ளி
என். மாசிலாமணிப்பிள்ளை "ஜஸ்டிஸ்" ஏஜண்ட், திருச்சி.

கும்பகோணம்
எ. சி. இராமச்சந்திரம்பிள்ளை அவர்கள் கும்பகோணம்.

மாயவரம்
எம். கல்யாண சுந்தரம் அவர்கள் [illegible] மாயவரம்.

தஞ்சாவூர்
டி. எஸ். மாணிக்கவாசகம் [illegible]

திருவாரூர்
வீ. எஸ். இராமன் அவர்கள் [illegible] திருவாரூர்.

நாகப்பட்டினம்
வீ. எஸ். டி. செட்டியார் அண்ட் சன்ஸ் நாகப்பட்டணம்.

திருவண்ணாமலை
வீ. எம். சாமி செட்டியார் [illegible] 10, [illegible] திருவண்ணாமலை.

காஞ்சீபுரம்
ஏ. சி. மாணிக்கவாசக முதலியார் ஆசிரியர், பச்சையப்பன் பாடசாலை, [illegible] காஞ்சீபுரம்.

வேலூர்
ஜ. மனப்பிள்ளை முனிசிபல் கவுன்சிலர், வேலூர்.

ஈரோடு
ஈ. வே. வாசுதேவன் "குடியரசு" ஆபீஸ், ஈரோடு.

சேலம்
எஸ். பெரியசாமி முதலியார் முனிசிபல் கவுன்சிலர் அம்மாபேட்டை, சேலம்.

கோயம்புத்தூர்
எ. நூர். சிவானந்தம் 23.437, பெரியகடை வீதி கோயம்புத்தூர்.

கொழும்பு
ஜீ. பாலப்பா பிள்ளை 51, [illegible]

[illegible]

தமிழ் நாட்டு நிகழ்ச்சிகள்.

நல் வரவாகுக!

அன்பும், அருங்குணங்களும், மேதக்க நோக்கமும், ஒருங்கே பொருவிய வரும், சென்னை சட்டசபை அங்கத்தவரும், ஆதிதிராவிடத் தலைவர்களில் தலை சிறந்து விளங்குபவரும், ஆதிதிராவிடக் குலக்குரு வானவரும், தேசத்தியாகிகளில் ஒருவராக என்றும் மதிக்கப் பெற்றவருமாகிய ஸ்ரீமத் ஸ்வாமி சகஜானந்தமவர்கள் இவ்விலங்காபுரியின் கண் நாளது 15 5 27 அன்று விஜயஞ்செய்து தென் இந்திய ஆதிதிராவிட வைதிக சமாஜத்தின் 5 வது வருடப் நிறைவு விழா வைபவத்திற்கு அதைத் தலைமை வகிப்பதன் சந்தோஷஞ் செய்திபினையறிந்து யாமனவில்லா ஆனந்த மடைகின்றும், சுவாமிகளது வரவை நல்வரவாகுக!

சுவாமிகள், தங்குல முன்னேற்றங் கருதி உண்மையாய்—உள்ளான இருதயப் பூர்வமாய், தனக்கு நேரிடும் எவ்விதமான இடையூறுகளையுமொரு பொருட்படுத்தாது,

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சா
ரெவ்வெவர் தீமையுமேற் கொள்ளார்
செவ்வியருமையும் பாரா[illegible] அவமதிப் [illegible]ள்ளார்
கருமமே கண்ணாயினார்"

என்ற அமுத வாக்கினைக் கடைபிடித்தவராய், அல்லும் பகலும் அயரா வைக்கத்திட னுழைக்கும் பெரியார். உண்மையான ஊழியர் தன்னலங் கருதா கீர்த்தி, புகழ் இவையாகிய வீண்டம் பங்களுக்கும் சுவாமிகளுக்கும் வெகு தூரம் என்பதையாம் அழுத்தமாக கூறுவாம். இன்னும் அப்பெரியாரது அரிய ஊழியங்கள் குலநன்மை வினை நாடி இந்நிமிஷம் வரை செய்து வருகின்றமையை இச்சிறியோனுகிய யான் அதிகமாக எடுத்தோத வல்லனல்லன்.

ஆகவே சுவாமிகள் இவண் விஜயஞ் செய்கின்றமை விசேஷத்த விதமாக ஆதிதிராவிட சகோதரர்களது நல்லதிஷ்ட வசமேயெனக் கூறல் மிகைபடா. எல்லாற்றானும் சுவாமிகளது வருகையினால், ஆதிதிராவிடர்களுக்கு ஓர் நன்மை அவசியம் ஏற்படுமென்பது திண்ணம். சுவாமிகளது அமுதவாக்கால்பெரும் நன்மைகளை ஆதிதிராவிட சகோதரர்கள் சங்கத்தவர்கள் அன்பாக தாழ்மையாக ஏற்று இடைநடுவில் ஒற்றுமையின்றி காரியத்யத்தை கை நழுவவிடாது தருக்தபிரகாரம் நடத்திவர முயற்சிப்பார்களேயாயின் அதுவே சுவாமிகளுக்கு செய்த நன்றியாகுமென்பதை இச்சந்தர்ப்பத்திலே இச்சிறியோன் உண்மையாகவே கூறுகின்றேன்,

எனவே, ஆதிதிராவிட திலகமாய் குருவாய், அன்பு சொரூபியாய் விளங்கும் அன்புடைய பெரியோரே வருக! வருக!! தங்களது வருகை நல்வரவாகுக!!! வல்ல இறைவன் தங்களுக்கு ஊக்கத்தையும் பலனையும் நீடிய ஆயுளையும் கொடுத்தருள பிரார்த்திக்கும்.

டைட்டஸ் பி. கனக சபை

ஆலயக்கட்டிட அஸ்திவார வைபவம்

திருநெல்வேலி ஜில்லா, பாளையங்கோட்டையைச் சார்ந்த சமாதான புரத்தின்கண் நடந்த 27 4 27ல் ஆலயக் கட்டிட அஸ்திபார பிரதிஷ்டை வைபவம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

தற்போதிருக்கப்பட்ட ஆலயத்தினெதிரில் வெகு அழகான பந்தலமைக்கப் பெற்று செடிகளாலும் புஷ்பங்களாலும் மிக்க நேர்த்தியாக அலங்கரிக்கப் பட்டிருந்ததின் காட்சி கண்டோனர் நிக்க தக்க விதமாக ஜொலித்துக் கொண்டிருந்தன. இது விஷயத்தில் விசேஷமாக சபையின் வாலிபர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி குறிப்பிடத் தக்கது காலை 7 மணியளவில் பாடகர்களொன்று கூடி நகர் வலம் கீத மேள தாளத்துடன் வந்து சேர குறித்த நேரத்தில் அதாவது 9 மணியளவில் கனம் எம் ஆசீர்வாதம் கனம் ஆர் வீ. ஆசீர்வாதம் கனம் ஜீ டி சிமியோன் ஆகிய மூன்று குருமார்களும் சில நேசிதருடன் வந்து சேர்ந்தனர். பிரஸ்தாப குருமார்களை அன்புடன் ஏற்கெனவே ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பாடசாலையில்வரவேற்கப்பட்டது சிறுவர் சிறுமிகள் பாடல்கள் கேட்டோனந்திக்க தக்க விதமாயிருந்தன. கிராமப்போன் பாட்டுகளும் முழங்கின பின்னர் மகா சந்தோஷத்துடன் ஆரவாரத்துடனே பாடசாலையிலிருந்து குருமார்களை அஸ்திபார பிரதிஷ்டை செய்யுமிடத்திற்கு அழைத்து சென்றனர். திரள் திரளான கூட்டமாக பந்தலில் நிறைந்திருந்தனர் இரண்டு தினங்களாக இடைவிடாது வருஷித்துக்கொண்டிருந்த மழை அன்று தினத்தில் அமைதியாயிருந்தமை அந்த அருட்பிரகாசரின் அற்புதமென்றே கூறலாம்.

ஆகவே யாவருங்கூடி ஸ்தோத்திர கீதங்கள்பாட கனம் ஜீ டி. சிமியோன் ஐயரவர்கள் அஸ்திபார பிரதிஷ்டை ஆராதனையின் முதற்பாகமும் வேத, முவேதாகமும் கனம் ஆர். வீ. ஆசீர்வா ஐயரவர்கள் 84ம் சங்கீதமும் வாசித்து முடியவே கனம் எம். ஆசீர்வாதம் ஐயரவர்கள் ஜெபம் செய்தார்கள் செய்து ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வைத்திருந்த சுண்ணாம்பு சாந்து இவைகளை வெள்ளிக் கரண்டியா லெடுத்து அஸ்திபாரக் கற்கள் மற்றின் மீதும் போடப்பட்டு அக்கல் ஆலயத்தின் முன்பாகம் தென்மேல் மூலையில் 3½ அடி ஆழத்தில் தோண்டி தயாரிக்கப்பட்டிருந்தவானத்தில் வெகு சந்தோஷ ஆரவாரத்துடனும் குதூகலத்துடனும் பதிக்கப்பட்டது பின்னர் சுருக்கஜபத்துடன் அஸ்திவார பிரதிஷ்டை மிக்க ஆனந்தகரமாக முடிவுபெற்றது. அப்பால் ஸ்ரீமான் கே. ஜி ஜான் அவர்கள் ஆலயத்திற்சென்று மணி வாங்கும்படியாக நேர்ந்திருந்த காணிக்கையின் பாதிப்பாகம் ரூ. 50 (ரூபாய் ஐம்பது) கனம் எம். ஆசீர்வாதம் ஐயரவர்களிடம் கொடுக்கப் பட்டது. அதே சமயத்தில் ஸ்ரீமான் கே. மோசஸ் சீவிவாசகன் அவர்கள் பாலகனுக்கு பரி: ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டு அலெக்ஸாண்டர் சாமுவேல் எனப் பெயரிடப் பட்டதும் இங்கு குறிப்பிடத் தக்கது,

ஆகவே, விஜயஞ்செய்திருந்த குருமார்களுக்கும், கூடியிருந்தவர்களுக்கும் தேநீர், விருந்து, சந்தனம் தாம்பூலாதி மூதலியவைகள் மிகதாராளமாகப் பரிமாரப்பட்டு சுமார் 11 மணியளவில் கூட்டம் இனிது கலைந்தது.

இவ் வைபவத்தின் பொருட்டும் விசேஷமாக, ஒடுக்கப்பட்ட மக்களுடைய காரியாதிகளில், முன்னேற்றத்தில், புகழ், கீர்த்தி, இவையாதிகளை நாடாதஉண்மையானஉள்ளான இருதயப்பூர்வமாகவுழைத்து வருபராகிய ஸ்ரீமான்ஜான்ஜெபமணிஉபதேசியார் அவர்களுக்குசபையார்கள்என்றும்மறவா நன்றி பாராட்ட கடமைபட்டிருக்கின்றார்கள்; அத்துடன் சபையின் பெரியோர்களும் வாலிபர்களுமெடுத்துக் கொண்ட அரிய முயற்சிக்கும் விசேஷமாக தேநீர்விருந்து விஷயத்தில் அதிக சிரமமெடுத்துக்கொண்ட ஸ்ரீமான் ஆறுமுகமவர்களுக்கும் நன்றி செலுத்துவதற்குரியதே. என்று நம நிருபர் எழுதுகிறார்.

நாடார் மஹாஜன சங்கம் மதுரை.

1927 வருஷம் எப்ரல் மாதம் 30 தேதி சனிக்கிழமை இரவு 8 மணிக்கு சங்கம் ஹாலில் நடைபெற்ற ஸ்பெஷல் கௌன்ஸில் மீட்டிங்கின் நடவடிக்கைகள்.

அருப்புக்கோட்டை ஸ்ரீமான் திரு. பெ. திருமேனிநாதநா[illegible]ரவர்களால் பிரரேபிக்கப்பெற்று ம[illegible]ரா ஸ்ரீமான் சிவ. அ. பாலசுப்பிரம[illegible]ய நாடாரவர்களால் ஆமோதிக்கப்பெற்று திருச்சுளி ஸ்ரீமான் க. முத்துநாடார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்,

அடியிற்கண்ட மெம்பர்கள் ஆஜராயிருந்தனர்:—ஸ்ரீமான் பா. ம. பாண்டிய நாடார் அவர்கள் மதுரை, ப. ரா. முத்துசாமிநாடார், மு. சடலை முத்து நாடார், வ. அ. எமநாடார், கொ. சி. தெ. குருசாமிநாடார் ப. வ. சோமசுந்தர நாடார் சிவ. அ. பால சுப்ரமணிய நாடார்,ஸ்ரீபெ. க. பெரியசாமி நாடார், 9. திரு. பெ. திருமேனிநாத நாடார், அருப்புக்கோட்டை, க. முத்துநாடார், திருச்சுளி, க. சரவணப் பெருமாள் நாடார், முக்கூடல், மூ. வடிவேல் நாடார், சமையநல்லூர், ப. வே. நா. மாரியப்பநாடார், ஆண்டிபட்டி.

1927-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31 தேதியோடு முடிந்த மூன்று மாதத்திய வேலைகளையும், வரவு செலவுகணக்குகளையும்பற்றிய ரிப்போர்ட்டுகாரியதரிசி ஸ்ரீமான் பாண்டிய நாடாரவர்களால் வாசிக்கப் பெற்று ஏகமனதாய் ஒப்புக் கொள்ளபெற்றது.

12.3-27 தேதிகளில் சென்னையில் மீட்டிங்கின் தீர்மானப்படி கட்டடங்கள் வாங்குவதற்காக நியமித்த கமிட்டி மெம்பர்கள் செய்திருக்கும் ரிபோர்டு வாசிக்கப்பெற்றது. அதில் கமிட்டி மெம்பர்கள்பல வித அபிப்பிராயங்கள் கூறியிருப்பதால் மீண்டும் கமிட்டி மெம்பர்கள் ஏகோபித்துச் சரியான சொத்துக்களைப்பார்த்து ரிபோர்ட்டு செய்யும்படி கேட்டுக் கொள்வதென தீர்மானிக்கப் பெற்றது.

1925-26, 1926—27 வருஷத்துக் கணக்குகளை பரிசோதிப் பதற்காக மதுரை மிஸ்டர் ப. ரா. முத்துச்சாமி நாடார் 1. மதுரை ஸ்ரீமான் எஸ். கே. துலைசாமி நாடார் 2. இருவர்களையும் ஆடிட்டர்களாக இக்கௌன்ஸில் நியமிக்கிறது.

அருப்புக் கோட்டை ஜீவகாருண்ய பிரசார சபையாரிட மிருந்து வந்த லெட்டர் வாசிக்க பெற்று, 9-6-25 ல் நடை பெற்ற நமது 10-வது காண்பிரன்ஸின் 5வது தீர்மானமாகிய நம் நாடார் மஹா ஜனங்களால் நடத்தப் பெறும் பொங்கல் உற்சவங்களில் ஜீவபலியிடுவதைநிறுத்தவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது,என்ற தீர்மானத்தை அமுலுக்கு கொண்டுவர இக்கௌன்ஸில் காரியதரிசிகளுக்கு அதிகாரம் கொடுக்கிறது.

(5) சிவ கெங்கை ஸ்ரீமான் மு. ரு. தேதி நாடார் அவர்களிட மிருந்து வந்த லெட்டர் வாசிக்க பெற்று. மேற்படி யாருக்கு ஒத்தாசை செய்யும்படி ஸ்ரீமான் ஆ. வே. சுப்பிரமணிய நாடார் அவர்கள், சிவகெங்கை ஆ. வே. பழனியப்ப நாடார், பெ. சுந்தரமகாலிங்க நாடார், தி. கா. திருவண்ணாமலை நாடார், இந்த நான்கு பேர்களுக்கும் லெட்டர் எழுத வேண்டுமென்று இக்கௌன்ஸில் காரியதரிசிகளுக்கு அதிகாரம் கொடுக்கிறது.

30-4-27 மதுரை கே. வெங்கிட்டராமய்யர் அவர்களிட மிருந்து வந்த லெட்டர் வாசிக்கப் பெற்றது காரிய தரிசிகள் யுக்தம்போல் பதில் எழுதியனுப்பும்படி தீர்மானிக்கலாயிற்று.

12-2-27ந் தேதி இராஜபாளையம் ஸ்ரீமான் பெ. ரு. யேம நாடாரவர்களிடமிருந்து வந்த விண்ணப்பம் வாசிக்கப்பெற்று. மேற்படி மனுவை வைஸ் பிரஸிடெண்டு ஸ்ரீமான் வ. பு. அ. செளந்திரபாண்டிய நாடார் M. L. C அவர்கள் பார்வைக்கு அனுப்புவதென தீர்மானிக்கலாயிற்று.

(8) முக்கூடல் ஸ்ரீமான் த. பி. சொக்கலால் நாடாரவர்களிடமிருந்து 35-4-27ல் வந்தலெட்டரும் முக்கூடல் ஸ்ரீமான் கு. வேநபசுபதி நாடாரவர்களிடமிருந்து வந்தலெட்டரும் வாசிக்கப்பெற்று அடியிற்கண்ட கனவான்களை கமிட்டியாக நியமிக்கலாயிற்று இக்கமிட்டியின்கன்வினர் ஸ்ரீமான் ஆ; அ. ஆறுமுக நாடார் அவர்கள், இக்கமிட்டி மெம்பர்கள்:—

காரியதரிசி ஸ்ரீமான் பா. ம. பாண்டிய நாடார் அவர்கள்

ஆ. அ. ஆறுமுக நாடார் நாடார் குல மித்திரன் ஏஜண்ட், எ. எம். எஸ் அண்ணாமலை நாடார் அருப்புக்கோட்டை எஸ். எஸ். பழனிச்சாமி நாடார் இவர்கள் ஒருவாரத்துக்குள் நேரில் போய் விசாரித்து ஒற்றுமை செய்து வைக்கும்படி. கேட்டுக்கொள்ளவதென இக்கௌன்ஸில் தீர்மானிக்கிறது.

வந்தனவுபசாரத்துடன் இரவு 9- மணிக்கு மீட்டிங்கு முடிவு பெற்றது.

...என்பதும் "சூத்திரன்" என்பதும், இந்நாட்டுக்குப் ... ஆரியர்கள் இந்நாட்டிற்குப் பிழைக்கவருவதற்கு முன் ... வித்தியாசங்கள் நம்நாட்டிலிருந்ததில்லை. ஆரியர்கள் இங்... முன்னால் இந்நாட்டில் ஜாதி ... கிடையாது. நமது முன்னோரின் வாழ்க்கையும் நமது ... வாழ்க்கையும், இச்சாதி வித்தியாசத்தாலே பாதிக்கப்பட்ட... பாதிக்கப்படுவதாயுமிருக்கிறது. நமது நாட்டின் தற்கால ஈனநிலைக்கு ஜாதி வித்தியாசமே காரணம். சர். கே. வி. ரெட்டி.

திராவிடன்.

சென்னை 1927ஆம் மே 9

வரவேற்புத் தலைவரின் சொற்பொழிவு.

மாயவரத்தில் கூடிய இருபது தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர் உயர்திருவாளர், ஆர் ... பிள்ளை அவர்களின் சொற்பொழிவை இப்பத்திரிகையின் பிறிதோரிடத்தில் வெளியிட்டுள்ளோம். அச்சொற்பொழிவு "சுருங்கச் சொல்..." [illegible]

...மோட்சம், நரகம், என்ற சொற்களால் நம்மை அடக்கி வைத்திருக்கின்ற புரோகிதக் கொடுமையை ஒழிக்க வேண்டும். ஒவ்வொருவரும் சுதந்திர வீரர்களாக விளங்க வேண்டும். குறைகளை நிறைவேற்றுதற்குரிய சிறந்த வழியை இம்மகாநாடு தீர்மானங்களில் காட்டுமாறு உங்களையும் தலைவர்களையும் கேட்டுக் கொள்ளுகிறேன்."

இவ்வீரமொழிகள் நம்மக்களனைவரையும் வீரர்களாக்குவதாக.

கவர்ன்மெண்டுக்கு எச்சரிக்கை

எல்லாவற்றிற்கும் ஓர் அளவுண்டு. [illegible]

பரோடாவில் சிவாஜி திருநாள்

ஊர்வலம் தாக்குற்ற விவரம்

பாராட்டத்தக்கமுன் சாக்கிரதை.

பம்பாய் மே 7

சிவாஜிமகாராஜாவின்கொண்டாட்டம் நடத்தப் பட்டபொழுது நேர்ந்தகலக விவரத்தைப்பற்றிக்கீழ் வருகிற அறிவிப்பு பரோடா கவர்ன்மெண்டால் ... [illegible]

ராஜிநாமா செய்தவரே மீளவும் அங்கத்தினர்

ஸர் அப்துர் ரஹீமின் வெற்றி.

கல்கத்தா, மே 7

வங்காளச் சட்டசபைக்கு ஒருவரது தேர்தல் கல்கத்தாவின் வடக்குப்பாக முஸ்லிம் தொகுதிக்கு நடைபெற்றது. இத்தொகுதிக்கு முன்பு பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸர் அப்துர் ரஹீம் அவர்களே இப்பொழுதும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். ஸர் ரஹீம் அவர்கள், குல்காட்டியில் சேர் ... [illegible] ... (இண்டிபெண்டெண்ட் முஸ்லிம் கக்ஷி) அவருக்கு 175 ஓட்டுகளும் மிஸ்டர். ஷேக் அப்துல் வாஹேப் என்பவருக்கு 4 ஓட்டுகளும்வந்தன.

பெரிய தலைவர்கள்

ஐரோப்பா போதல்

லஜபதிராயின் முக்கிய உரை.

பம்பாய், மே 7—

ராவல்பிண்டி யென்னும் பஞ்சாப் ... இன்று புறப்பட்டவர்கள் லாலா லஜபதி ராய், மெஸ்ஸர்ஸ் ஜி. டி. பிர்லா, வி. வி. கிரி, ஜி. சேதி, விவசாய கமிஷனில் உள்ள வேறு இருவர், ஸர் கங்காராம், பி. யஸ். காமத் ஆகியவர்கள். லாலா லஜபதிராயைப் பத்திரிகைப் பிரதிநிதிமார்கண்டுபேசிய பொழுது, அவர், தாம் பிர்லாவுக்கு யோசனை கூறி உதவுவதற்காகப்போவதாகவும், தம் சுகாதாரத்துக்கே போவதாகவும் சொன்னார். [illegible]

... மாதவன் நாயர், வி. யம். கிக்க,யச்.டி. வி. பெயிலி இவர்களும் பிரயாணம் செல்கின்றனர்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் செய்த கேடு

தொழில் நிர்வாகிகளின் பிரதிநிதியின் பலம்.

[illegible] ... இது, ரூபாய் 18பென்ஸ் விகிதமுள்ள தென்றுவைத்துக்கொண்டதால் வந்த கேடு. இம்முறை நன்றென ஜனப் பிரதிநிதிமாரில் சிலர் இந்திய சட்ட சபையில் ஓட்டுகள் செய்துள்ளார். தேர்ந்தெடுத்த மக்களுக்குச் செய்யும் நன்றியானது இந்த கேட்டு முறைக்குச் சாதகமாக ஓட்டுசெய்ததாகும். இதற்காக ஜனக்கள் அன்னவருக்கு வந்தனம் செலுத்த வேண்டியதுதானே! தொழில் செய்வோரின் யஜமானர்களான முதலாளிகள் அல்லது தொழில்நிர்வாகிகளின் பிரதிநிதியாக மிஸ்டர் பிர்லா அன்றியும் தொழில் செய்வோருக்கே பிரதிநிதியாகப் போகின்றவரான மிஸ்டர் வி. வி. கிரி என்பவர், ஜீனிவா கூட்டத்தில் யோசனைக்கு வரும் விஷயங்களுள், தொழில் செய்வோருக் குண்டான குறைந்த கூலியும், நோய்காலத்தில்இன்ஷியூரன்ஸும், சமத்துவக்கூடுதல் முறையும் கவனிக்கப்படும் என்றார். லாலா அவர்களும் மிஸ்டர் பிர்லாவும் [illegible]

மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரிகள் பதவி

இந்திய அரசாங்க அறிக்கை

சிம்லா, மே 7

அறிக்கை.—1927 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21 ஆம் தேதி டில்லியில் கூடிய சட்ட சபையில் இந்திய அரசாங்க[illegible] தென் ஆப்பிரிக்காவின் ஐக்கிய [illegible] ஒத்துச் செய்து கொண்ட ஒப்பந்த முறையைப் பற்றி வெளியிட்டதில், தென்னாப்பிரிக்கா ஐக்கிய கவர்ன்மெண்டினால், இந்தியா கவர்ன்மெண்டின் ஒரு ஏஜண்ட் ... [illegible]

டில்லியில் முன் ஏற்பாடு

டில்லி, மே 7 [illegible]

அயோக்கிய காரியத்துக்குத் தொண்டுவிடப்பட்ட பெண்கள்

வழக்கில் உரைத்திட்ட வாக்குமூலம்

கல்கத்தா, மே 7

நூறு லேவோரேண்டியும் பெஞ்சமின்ப்ரேக்லின் னும் தலைமை ப்ரெஸிடென்ஸி மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டில், 4 பெண்களை அயோக்கிய காரியத்துக்காக இங்கே வந்திட்டனர் என்ற வந்த வழக்கில், நேக்கில் ட்ரோனவியர் என்ற பிரெஞ்சுப் பெண் கொடுத்த சாக்ஷியமாவது:— தான் ஒரு நாட்டியப் பெண், அக்டோபர் மாதம் 15ம் தேதிநான் குற்றஞ்சாட்டப்பட்டவர்கூட இன்னும் 4 பெண்களுடன் மாதம் 500 ரூபாய்க்குச் சினிமாக்களில் நாட்டியம் ஆடப்பாரிஸ் நகரைவிட்டுப் புறப்பட்டோம். [illegible]

உங்களுக்கு சுத்த கத்தர்வேண்டுமா?

அப்படியானால் உடனே உங்களுடைய விலாசத்தை தெரியப்படுத்துங்கள். எங்களிடம் திருப்பூர் கத்தர்ஜவுளிகள், திருப்பூர் கத்தர் பனியன்கள் கிடைக்கும். விலைவிபர ஜாபிதா இலவசமாய் அனுப்பப்படும்.

M. V. KARUPPANNA CHETTIAR,
Khaddar Merchant,
TIRUPUR, (S. India.)

106

மயூரத்தில் தஞ்சை ஜில்லா 6-வது மகாநாடு.

சர் தியாகராய மண்டபத்தில் கூடிற்று

வரவேற்புக்கழகத் தலைவரின் உபந்நியாசம்

மாயவரத்தில் என்றும் கண்டிராத காட்சி

தலைவர்களின் ஊர்வலமும் ஜனங்களின் ஊக்கமும்

சனிக்கிழமை நடை பெற்ற விவரம்,

(நமது விசேஷ நிருபரிடமிருந்து)

தஞ்சை ஜில்லா 6வது மகா நாட்டிற்கு விஜயம் செய்யும் பொருட்டு சர் பனகால் அரசர், சர் ஏ. பி. பாத்ரோ, ராவ் பகதூர் டி. வரதராஜலு நாயுடு, திருவாளர்கள் ஏ. இராமசாமி முதலியார், ஜே. எஸ். கண்ணப்பர், என். தண்டபாணி பிள்ளை பிஞ்சல் சுப்பிரமண்யம் செட்டியார் முதலியவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் சென்ற வெள்ளிக்கிழமை இரவு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வண்டியில் சென்னையிலிருந்து சனிக்கிழமை காலை 6 மணிக்கு மாயவரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இவர்களை வரவேற்பதற்காக வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு. சின்னையா பிள்ளை திரு. கே. சி. இராஜதுரை செட்டியார் முதலியவர்களும் மகாநாட்டுத் தொண்டர்களும் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்கள். தலைவர்கள் வந்திறங்கியதும் அவர்களுக்கெல்லாம் மாலையிட்டு மிகுந்த குதூகலமாக வரவேற்று ஸ்டேஷனிலுள்ள இரண்டாவது வகுப்பு பிரயாணிகள் தங்குமிடத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவர்களுக்கெல்லாம் காலை ஆகாரம் சப்ளை செய்யப்பட்டது. காலை 8 மணிக்கு ஸ்டேஷனிலிருந்து தலைவர்களையெல்லாம் ஊர்வலமாக அழைத்துக் கொண்டு போகப்படுமென்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 10-30 மணிக்கு வந்த இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸில் தலைவர் வந்தபடியால் 11 மணிக்கே ஊர்வலம் புறப்பட்டது. மகா நாட்டுத் தலைவர் வந்த வண்டியில் திவான்பகதூர் எஸ். குமாரசாமி செட்டியார் எஸ். சிதம்பரநாத முதலியார், டபிள்யூ. பி. ஏ. சௌந்திர பாண்டிய நாடார், ஈ. வி. இராமசாமி நாயகர், பி. டி. இராஜன் ஜே. என். இராமநாதன் முதலியவர்கள் வந்தனர். அவர்கள் ஸ்டேஷனில் இறங்கியதும் மகாநாட்டுத் தலைவருக்கு ஜே! வைக்கம் வீரருக்கு ஜே! கோகலே ஹால் வீரருக்கு ஜே, பி. டி. இராஜனுக்கு ஜே! என்று ஜனங்கள் சத்தம் போட்டதுடன் கரகோஷமும் செய்தனர். பிறகு, கரகோஷத்தினிடையே ஸ்டேஷனிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. இரண்டு குதிரைகள் பூட்டப்பட்ட கோச் வண்டியில் மகாநாட்டுத் தலைவரும் திரு ஈ. வி. இராமசாமி நாயகரும் ஏறிக்கொண்டனர். அதன் பின்னால் மகாநாட்டாளர்களும் மற்றுமுள்ள தலைவர்கள் ஏறிக்கொள்ளவே நானாவித வாத்தியங்கள் வாசிக்கவும் மகாநாட்டு வாலண்டியர்கள் மாத்திரமன்றி சிக்கலிலிருந்து வந்த செங்குந்த மகாஜன சங்க வாலண்டியர்களும் சூழ்ந்து வர ஊர்வலமானது சேனியத் தெருவின் மூலமாகச் சென்றது. ஊர்வலம் சென்ற தெருக்களிலெல்லாம் நானாவித தோரணங்களும் பச்சிலைகளும் கட்டப்பட்டிருந்ததுடன் முக்கியவிடங்களில் வாசம் திவான்பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் வருக, சர் பனகால் அரசர் வருக, வைக்கம் வீரர் ஈ. வி. இராமசாமி நாயகரின் வரவு நல்வரவாகுக, ஆரியருக்கு ஜே, கண்ணப்பர் வருக [illegible]

[illegible] வாக்கியங்களும் பெரும் எழுத்தில் எழுதி கட்டி விடப்பட்டிருந்தது. பந்தலுக்குள்ளே "திராவிடன், குடி அரசு, ஜஸ்டிஸ் பத்திரிகைகளே ஆதரியுங்கள், சுதேசமித்திரன் தமிழர் விரோதி, பார்ப்பனீயம் நாட்டைப் பாழாக்கும், பார்ப்பனீயம் இறந்துவிட்டது, பிறப்பில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்பதில்லை என்றும், டாக்டர் நாயுடு ஏன் வரவில்லையென்றும், சுயமரியாதைக் குரிய வாக்கியமும் எழுதப்பட்ட அட்டைகள் பல விடங்களிலும் தொங்கவிடப் பட்டிருந்தன. கொட்டகையின் ஒரு மூலையில் கதர் ஸ்டோர் ஒன்றும் திறக்கப்பட்டிருந்தது. அதில் மகாநாட்டுக்கு வந்தவர்களில் சிலர் கதர் வாங்கிய வண்ணமாகயிருந்தனர். கொட்டகையின் மத்தியில், தலைவர்கள் வீற்றிருப்பதற்கு போடப்பட்ட மேடையில், நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. மேடைக்கு இருபக்கத்திலும் வரவேற்புக்கமிட்டி அங்கத்தினர்களும் டெலிகேட்டுகள் உட்காருவதற்காகப் பெஞ்சுகள் போடப்பட்டிருந்தன. மகாநாட்டின் நடவடிக்கையைப் பார்க்கவந்த விசிட்டர்கள் உட்காருவதற்கு சுத்தமான மணற்தரையில் சமுக்காளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. பந்தலின் மற்றோர் மூலையில் மகாநாட்டுக் காரியாலயம் அமைக்கப்பட்டிருந்தது. தாகவிடாய் தீர்ப்பதற்காக புதுப்பானைகளில் சுத்தமான தண்ணீர் வைத்து சப்ளை செய்யப்பட்டும், காற்றோட்டம் அதிகமாகவில்லாத விடங்களிலுள்ளோருக்கு விசிறிகள் கொடுக்கப்பட்டும் வந்தது. மகாநாட்டின் வாசற்படியில் சோடா பழம், ரொட்டி முதலியவைகள் விற்கும் கடைகளும் ஏற்பட்டிருந்தன.

மகாநாட்டின் ஆரம்பம்.

நேற்றுமுன் தினம் மாலை 3 மணிக்கு தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகாநாடு மாயவரம் முனிசிபல் பிரைமரி ஸ்கூல் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள தியாகராயர் சமதர்ம மண்டபக் கொட்டகையில் கூடிற்று. மகாநாடு கூடுவதற்கு முன்பாகவே ஏராளமான ஜனங்கள் குழுமி தலைவர்களின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். தலைவர்கள் வந்து சேர்ந்ததும் "பனகால் அரசருக்கு ஜே, கிருஷ்ணன் நாயருக்கு ஜே, என். தண்டபாணி பிள்ளைக்கு ஜே, சர் பாத்ரோவுக்கு ஜே" என்றும் மற்றும் உள்ள அனைவரும் ஒவ்வொரு தலைவருக்கும் ஜே, என்றும் சத்தம் போட்டு பெரும் கரகோஷம் செய்து வரவேற்றனர். மகாநாட்டுக்கு ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகள் வந்திருந்ததுடன் வெளி ஜில்லாக்களிலும் இருந்தும் பலர் வந்திருந்தார். சுமார் 4000 ஜனங்கள் வந்திருந்தார்கள். வந்திருந்தவர்களில் முக்கியமானவர்களாவன:—பர் பனகால் அரசர், ஏ. பி. பாத்ரோ, திவான்பகதூர் எம். கிருஷ்ணன் நாயர், திவான்பகதூர் குமாரசாமி செட்டியார், ராவ்பகதூர் டி. வரதராஜுலு நாயுடு திருவாளர்கள் ஏ. ரா [illegible]

மகாநாட்டுப் பந்தல்.

[illegible]

ஆரம்பமாயிற்று. கும்பகோணம் திருமீனாட்சிசுந்தரமும் மற்றும் ஒருவரிலிரும் கடவுள் ஸ்தோத்திரம் செய்தனர். பிறகு மகாத்மா காந்தியின் உருவப்படத்தை பனகால் அரசர் மகாநாட்டில் திறந்துவைத்தார் (முழு விபரம் நாளைவரும்).

வரவேற்புக் கழகத் தலைவரின் சொற்பெருக்கு

தஞ்சை ஜில்லா 6வது பார்ப்பனரல்லாதார் மஹாநாட்டு, வரவேற்புக்கழகத் தலைவர் கார்குடி திருவாளர் ஆர் சின்னையா பிள்ளை அவர்களின் வரவேற்புப் பிரசங்கம், பின்வருமாறு:

அன்பாபணி செய்யவென்னை
ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானேவந்
தெய்தும் பராபரமே.

சகோதரிகளே! சகோதரர்களே!

எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி இங்கு விஜயம்செய்திருக்கும் மாபெரும் தலைவர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும், மகா ஜனங்களுக்கும், தஞ்சை ஜில்லா மகாநாட்டு வரவேற்புக்கழகத்தாரின் சார்பாக என் மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

உங்கள் வரவு நல்வரவாகுக!

உங்கள் வரவு எங்கள் ஜில்லா வாசிகளுக்கு புத்துயிரையும், புதிய உணர்ச்சியையும், சுய மரியாதை விருப்பத்தையும், உண்டாக்கி விடு மென்பதை பெருமையுடன் உரைக்கின்றேன். பொது நல சேவையே கடமையாகக் கொண்ட உங்கள் விஜயத்திற்கு எங்கள் சிற்றறிவால் செய்திருக்கும் ஏற்பாடுகளை [illegible]றன. அவர்களைப் பற்றி நாம் கவலை கொள்ள வேண்டுவதில்லை. சூழ்ச்சிக்காரர்களின் மாயா வலையில் அகப்பட்டுழலும் நமது பார்ப்பனரல்லாதார்கள் நிலைமையைக் கண்டு தான் நாம் பெரிதும் வருந்துகின்றோம். அத்தகையவர்களுக்கு நல்லுணர்வையும், சுயமரியாதை யுணர்ச்சியும் அளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை இப்பரிசுத்தமான மேடையிலிருந்து இறைஞ்சுகின்றேன்.

எம் போன்றோர் பலர் சில காலங்களுக்கு முன்னர் பார்ப்பனர்களுடன் சேர்ந்துக் கொண்டு நமது இயக்கத்தை எதிர்த்ததாக எண்ணக்கூடும். நாங்கள் அப்படி ஒருக்காலமும் இவ்வியக்கத்தின் கொள்கைகளை எதிர்த்தோமில்லை ஆனால், நம்மியக்கத்தின் மேலான கொள்கைகளை தகுந்தவாறு கையாளாமையால்தான் நாங்கள் பிரிந்து நிற்கிறோம். இப்பொழுது பார்ப்பனரல்லாதாரியக்கம் தனது பரிசுத்தமான நிலைமையைக் காட்ட முன் வந்திருப்பதால் நாங்கள் ஒத்துழைக்க வந்திருக்கின்றோம். சுயமரியாதைக்கும் அரசியல் சமூக சீர்திருத்தத்திற்கும் அவா கொள்ளும் ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் இவ்வியக்கத்தில் சேர்ந்துழைக்குமாறு வேண்டுகிறேன்.

சுயமரியாதை.

சுயமரியாதை வீரர்களே,

'மயிர்நீப்பின் வாழாக் கவரிமா
அன்னயார்
உயிர் நீப்பர் மானங் கெடின்.''

என்பது பண்டைத் தமிழ் வீரர்களின் கொள்கை. சுய மரியாதை என் [illegible]

திரு. ஆர். சின்னையா பிள்ளை

சனிக்கிழமையன்று மாயவரத்தில் கூடிய தஞ்சை ஜில்லா ஆறுவது பார்ப்பனரல்லாதார் மகாநாட்டின் வரவேற்புக்கழகத்தலைவர்.

[illegible]

மேலும் இயக்கம்.

[illegible]

ராமல் வீண் வழிகளிற் செலவு செய்து நம் மதத்திற்கும், சமூகத்திற்கும் பெருந் தீமையை உண்டாக்குகின்றார்கள். இத்தகையவர்களை நல்வழிப்படுத்தவும் அறநிலையங்களின் பொருள்களைக் காப்பாற்றவும் ஏற்பட்ட அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தை, தேச மக்கள் அனைவரும் போற்றுகின்றார்கள். அதனை நிறைவேற்றிய நமது வீரரும், தலைவருமாகிய கனம், பனகாலரசரின் புகழ் என்றென்றும் அழியாது நிலை நிற்பதொன்றல்லவா? இச்சட்டத்தால் பார்ப்பனர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கும், சுய நலத்திற்கும் இடையூறு நேர்ந்து விட்டதே என்று வருந்துகின்றார்கள். மற்றும், மனிதர்க்கு மனிதர் அடிமைத்தனமிருப்பதை அகற்றவும், எல்லா மக்களும் சமரியாதையுடன் அனுபவிக்கக்கூடிய சுயராஜ்யத்தைப் பெறவும், நமது கட்சி பாடுபடுகின்றதென்பதை நாமனைவரும் உணர்ந்திருக்கின்றோம். இவற்றிற்கெல்லாங் காரணமாகவிருந்த காலஞ்சென்ற நமது மாபெருந் தலைவர்களாகிய ஸர். தியாகராயர், டாக்டர் நாயர் இவர்களுக்கு நாமெத்தகைய நன்றியைச் செய்யப் போகின்றோம். அவர்கள் கொள்கைகளை உலக முழுவதும் பரவச்செய்து, எல்லா மக்களையும் இன்பவாழ்வு வாழச் செய்வதே நமது கடமையாகும். இதுவே நாம் அவர்களுக்குச் செய்யும் கைம்மாறுகும். நாம் அப்பெரியார்களின் வழிகளைப் பின்பற்றி நடப்போமாக.

நமது கடமை

நம் மக்களின் சுயமரியாதையை முதன்மையாகக் காப்பாற்றக்கூடிய கதர், தீண்டாமை யொழித்தல், மதுவிலக்கு இம்மூன்றையும் மகாத்மாகாந்தியடிகள் காங்கிரசின் முக்கியமான திட்டங்களாகியதால் காங்கிரஸினிடத்தில் பொதுமக்களுக்கு நம்பிக்கையும் மதிப்பும் உண்டாயின.

மகாத்மா காந்தியடிகள் சிறைபுகுந்தபின்னர் சுயராஜ்யக் கக்ஷியார் மேற்படி திட்டங்களை கடைசியில் நழுவவிட்டு பேச்சளவில்வைத்துக்கொண்டு சொல் ஒன்று செய்கை ஒன்றுமாக மாறிவிட்டதால் காங்கிரஸினிடத்தில் பொது மக்களுக்கிருந்த மதிப்பும் நம்பிக்கையும் இழந்து விட்டார்கள்.

நமதியக்கத்தில் கதர் தீண்டாமை ஒழித்தல், மதுவிலக்கு இம்மூன்றையும் முதன்மையான திட்டமாக வைத்துக் கொண்டிருக்கின்றோம். நமது கட்சி தோன்றிய காலமுதல் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டுக்கொண்டு வருகிறோம். நமது கட்சியில் பெரும்பாலோர் எப்பொழுது கதர் கட்டுகின்றார்கள்? கதர் கட்டாத சில தலைவர்களும், பிரதிநிதிகளும் இன்று முதல் கதர் கட்டுவதாக இம்மேடை மீதிலேயே தங்களுக்குள் தாங்களே தீர்மானஞ் செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏழை தொழிலாளர்களின் துன்பத்திலும்வறுமையிலும் அனுதாபமுள்ள ஒவ்வொரும் கதர், தீண்டாமை ஒழித்தல், மதுவிலக்கு இம்மூன்றிற்கும் இடைவிடாது உழைக்க வேணுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இவைகளை ஆதரிக்கக்கூடிய பார்ப்பனரல்லாத பத்திரிகைகளையும் நாம் பரவச்செய்ய வேண்டும்.

முடிவுரை

சகோதரிகளே! சகோதரர்களே!

நான் நீண்டநாழிகை பேசி வீணாக உங்களைக் காக்கவிரும்பவில்லை. பின்னால் நீங்கள் கேட்கப் போகும் நமது தலைவரின் பிரசங்கத்திற்கும் மற்றும் பல காரியங்களுக்கும் உள்ள நேரத்தைத்தை நான் எடுத்துக் கொள்ளவில்லை. உறுதியாகச் சில வார்த்தைகள் கூறி எனது விரிவுரையை நிறுத்திக்கொள்ளுகின்றேன்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய
அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்று நமது பொய்யா மொழியாரே புகன்றிருக்கின்றார். நாம் இம்மூதுரைக்கு இலக்காகாமல் சொல்லுவதைச் செய்கையிற் காட்ட வேண்டும். செய்கையில் ஒன்றுமில்லாமல் வீணாக இத்தகைய கூட்டங்களைக் கூட்டிப் பொருளைச் செலவு செய்துவிட்டுப் போவதனால் யாதொரு பயனும் விளையப்போகிறதில்லை. நாம் இன்று முதல் நமது கொடியை ஒவ்வொரு கிராமந்தோறும் ஒவ்வொரு வீடுதோறும் சென்று, நமது ஒவ்வொரு ஆண், பெண் மக்களிடத்திலும் சுயமரியாதை இயக்கத்தின் உண்மையைக்கூற வேண்டுகிறேன். பிறவியினால் உயர்ந்தோர் என்ற அகம்பாவம் ஒழிய வேண்டும். மோட்சம், நரகம் என்ற சொற்களால் நம்மை அடக்கிவைத்திருக்கின்ற புரோகிதக் கொடுமையை ஒழிக்க வேண்டும். ஒவ்வொருவரும் சுதந்திர வீரர்களாக விளங்க வேண்டும். குறைகளை நிறைவேற்றுதற்குரிய சிறந்த வழியை இம்மகாநாடு தீர்மானங்களில் காட்டுமாறு உங்களையும் தலைவர்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அன்பர்களே!

இவ்வளவு நேரம் எனது சொற்களைப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த உங்கள் அனைவருக்கும் எனது தாழ்மையான வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

தாங்கள் உங்களுக்கு உணவு, உறைவிடம் முதலிய வசதிகளைச் செய்து [illegible]

வைக்க வேண்டிய பணியில் தவறி தின் தலைவர்கள் குறைவாயிருப்பினும் பொறுத்துக் கொள்ளுமாறு மீண்டு மொருமுறை வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பார்ப்பனீயம் ஒழிக! ஒற்றுமை நிலவுக!!

தலைவரைத் தேர்ந்தெடுத்தல்

வரவேற்புக் கழகத் தலைவர் கார்குடி திரு. சின்னையா பிள்ளை அவர்கள் தம் வரவேற்புப் பிரசங்கத்தை நிகழ்த்தியதும் இம்மகாநாட்டுக்கு தலைமை வகிக்க டாக்டர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்களைத் தலைமை வகிக்கும்படி பிரரேபித்து சிறிது நேரம் பேசினார்.

திரு பன்னீர் செல்வம்.

திரு. பன்னீர் செல்வம் அவர்கள் திரு. சின்னையா பிள்ளையின் பிரரேபணையை ஆமோதித்துப் பேசியதாவது:- இம்மகாநாடு 6வது மகாநாடாகும். எலெக்ஷனுக்குப் பிறகு நடப்பதால் மிகவும் முக்கியமானதாகும். முதல் மகாநாடு தஞ்சையில் நடைபெற்றது. இரண்டாவது மகாநாட்டை சென்னை பிரஸிடென்ஸி சங்கக் காரர்கள் தஞ்சையில் நடத்தினார்கள். 3வது மகாநாடு நாகையில் நடைபெற்றது. இந்த 3மகாநாடுகளும் [illegible] வழங்கப்பட்டதற்கு முன்பு நடைபெற்றவை. நமது கட்சியார் அதிகாரத்துக்கு வாராததற்கு முன் இந்த 3 மகாநாடுகளும் நடந்திருக்கின்றன; அதன் பயனாக சட்டசபைத் தேர்தலில் 2ஸ்தானங்கள் நமக்குக் கிடைத்தன. பிறகு 6 மாதத்திற்கெல்லாம் ஒரு காலி ஸ்தானம் ஏற்பட்டு அதுவும் நமக்குக் கிடைத்தது. பிறகு 1922ம் வருடத்தில் 4வது மகாநாட்டை கும்பகோணத்திலும் 1925-ம் வருடத்தில் 5வது மகாநாட்டை தஞ்சையிலும் நடத்தினோம். நமது கட்சி இப்போது தோல்வியுற்றதனால் தான் கட்சியின் நோக்கங்களை ஜனங்கள் உணர ஆரம்பித்திருக்கின்றார்கள். சர் பனகால் அரசருக்கு மந்திரி பதவி போய்விட்டதனால்தான் அவருடைய பெருமை வெளியாகியிருக்கிறதென்பது எனது அபிப்பிராயம் (கரகோஷம்) நமது கட்சியார் அதிகார வர்க்கத்திலிருந்தபோது அராஜகத்தைத் திறமையாக நடத்தியிருக்கின்றார்கள் என்று [illegible]

[illegible]

ஆகவே, அவருடைய ஞாபகார்த்தமாக ஒரு சங்கீத கலாசாலை ஏற்படுத்த வேண்டியதுதான். அதற்காக பனகால் அரசர் ரூ. 100ஐ நன்கொடையாக அளித்திருக்கின்றார். இந்த சங்கீத கலாசாலைக்கு அனைவரும் உதவிபுரிந்து அதை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கின்றேன்.

தீர்மானங்கள்.

(1) பிறப்பினால் உயர்வு தாழ்வுஎன்று ஏற்படுத்திக் கொண்டிருக்கிற வழக்கமானது நாட்டின் சுயராஜ்யத்திற்குத் தடையாக இருப்பதால் அந்த ஜாதி வித்தியாசத்தை விட்டுவிட வேண்டுமென்று பார்ப்பனரல்லாதவரைக் கேட்டுக்கொள்ளுவதுடன் கலியாணங்களிலும் மற்ற சடங்குகளிலும் பார்ப்பன குருக்களை வைத்து நடத்தக்கூடாதென்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு சமுதாய உரிமை கொடுக்க வேண்டுமென்றும், கோவில்களில் சென்று கடவுள் வழிபாடு செய்யவும் பொது வீதிகளையும் குளம் கிணறுகளையும் எல்லாஜனங்களும் உபயோகப்படுத்த அனுமதிக்கவேண்டுமென்றும், இம்மகாநாடு கருதுகின்றது" என்ற தீர்மானத்தை திரு. ஈ. வி. இராமசாமி நாயக்கர் பிரரேபித்துப் பேசினார். இதைத் திரு. கே. சுப்புசாமி ஆமோதித்தார்.

[illegible]

[illegible]

இந்தச் சாலையும் தலைவரால் பிரே[illegible] ஏகமனதாக நிறைவேற்[illegible]

[illegible]

அடுத்தமகாநாடு பட்டுக்கோட்டையில் கூடும்

[illegible]

சு. ஏ. பி. பாத்ரோ

[illegible]

பனகல் ராஜா

[illegible]

அகமும்—புறமும்

சவரன் வெள்ளி விலை.

சவரன் 1க்கு	ரூ 15—12—0
வெள்ளி ரூபாய் எடை	0—10—0

[illegible]

அரசாங்க அறுமதிச் செய்தி

[illegible]

சென்னை கார்பொரேஷன் நோட்டீஸ்

[illegible] (Filter Beds) [illegible] 1927ம் [illegible]

ரிப்பன் கட்டிடம் ஜெ. வெங்கட நாராயணா
5—5—27 கமிஷனர்.
(115)

முகமதியர்களின் கண்டனக் கூட்டம்

—:o:—

ஹைகோர்ட் ஜட்ஜிகளின் நியமனம்

ஒரு முகமதியர் கூட இல்லை

வகுப்புச் சண்டைக்கு கவர்ன்மெண்டு தான் காரணம்.

நேற்று மாலை சுமார் 6-30 மணிக்கு திருவல்லிக்கேணி கடற்கரையில் முகமதியர்களின் மாபெருங் கூட்டமொன்று கூடியது. அநேக முகமதியப் பிரமுகர்களெல்லாம் வந்திருந்தனர். கூட்டத்தினருள் அதிருப்தியும் மனக் கிலேசமும் பரவியிருந்தது.

கூட்டத்தின் தலைவர் முகவுரையாகச் சில வார்த்தைகள் கூறிய பின்பு மிஸ்டர் பருக்கி எம். எல். ஏ. அவர்களைப் பேசும்படி கேட்டுக் கொண்டார்.

மிஸ்டர் பருக்கி எம். எல். ஏ.

மிஸ்டர் பருக்கி எம். எல். ஏ. அவர்கள் கீழ்கண்ட தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பின்வருமாறு பேசினர்:—"சமீபத்தில் காலியான மூன்று ஹைகோர்ட்டு ஜட்ஜு ஸ்தானங்களில் ஒருஸ்தானத்திற்காவது ஒரு முகமதியரை நியமிக்காததற்காக இந்த முகமதியர்களின் பொதுக்கூட்டமானது கவர்ன்மென்டைக் கண்டிப்பதுடன், இனிமேலாவது முகமதியர்களின் உரிமைகளைப் புறக்கணிக்காதிருக்கும்படி கவர்ன்மெண்டுக்கு எச்சரிக்கைசெய்கிறது."

தலைவரவர்களே, சகோதரர்களே, நாம் நம் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக என்னென்ன செய்ய வேண்டுமென்பதை ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவதற்காக நாம் இங்கு கூடியிருக்கிறோம். சமீபத்தில் ஹைகோர்ட்டில் மூன்று ஹைகோர்ட்டு ஜட்ஜு ஸ்தானங்கள் காலியாயின. அம்மூன்றில் ஒருஸ்தானமாவது நமது வகுப்பாருக்குக் கொடுக்கப்படுமென்று எதிர் பார்த்திருந்தோம். நாம் ஏமாற்றப்பட்டுப்போய்விட்டோம். இதற்கு முன்னர் ஹைகோர்ட்டுக்கு நியமனங்கள் ஆனபோதும், நாம் நம் உரிமைகளைக் கவர்ன்மெண்டுக்கு எடுத்துச் சொன்னோம். அடுத்தமுறைக் கவனிப்பதாகக் கவர்ன்மெண்டார் வாக்களித்தார்கள். அதுவுமின்றி அநேக தடவைகளில் கவர்ன்மெண்டும், கவர்ன்மெண்டு அங்கத்தினர்களும் நம் உரிமைகளை அடுத்தமுறைக்கவனிப்பதாக நம் தலைவர்களிடம் சொல்லியிருக்கின்றனர். அதனால் நாம் மிகவும் நிச்சயமாக நம்பியிருந்தோம். கவர்ன்மெண்டு நம் பிறப்புரிமைகளைப் புறக்கணித்து வருகிறது. இப் புறக்கணிப்புக்கு நாம்தான் காரணம். நாம் அமிழ்ந்துகொண்டிருக்கும் வரையில் நம்மை யாரும் கவனிக்கப் போவதில்லை. இப்பொழு தேற்பட்ட மூன்று காலிஸ்தானங்களுக்கு ஒரு வெள்ளைக்காரரும் இரண்டு இந்துக்களும் நியமிக்கப்பட்டு விட்டனர். நம்மை மாத்திரம் கவனிப்பாரில்லை. சர். அப்துர்ரஹீம் ஹைகோர்ட்டை விட்டு கல்கத்தாவுக்குப் போனதிலிருந்து நாம் கவர்ன்மெண்டாரிடம் முறையிட்டுக் கொண்டுவந்திருக்கிறோம். இன்னும் நமது முறைக்குத் தக்க பதில் கிடையாது. ஒரு நாட்டில் பல வகுப்புகளிருக்கும்போது ஒவ்வொரு வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் அரசாங்கத்தில் பங்கிருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல் ஒரு வகுப்பாரே கவர்ன்மெண்டில் ஆதிக்கமும் செல்வாக்கும் பெற்றுவிட்டால் மற்றைய வகுப்புகளுக்குப் பொறுக்காதிருப்பது இயற்கை. ஒவ்வொரு வகுப்புக்கும் தன் தாய் நாட்டின் கவர்ன்மெண்டில் சமத்துவ உரிமை இருக்கவேண்டும். அதனதன் ஜனத் தொகைக்குத் தக்கவாறுவது அதனதன் பங்கைப் பகிர்ந்து கொடுத்து விட வேண்டும். அப்படிக்கின்றி கவர்ன்மெண்டானது ஒரு வகுப்பை ஒருவிதமாகவும், பிற வகுப்புக்களை வேறுவிதமாகவும் நடத்தி வருமானல் வகுப்புச் சண்டைகள் வளர்ந்துகொண்டுதான் வரும். கவர்ன்மெண்டு நியாயமாக, நீதியாக, பட்சபாதமில்லாமல், நடந்துவரும் பட்சத்தில் இந்த நாட்டில் வகுப்புச் சண்டைகள் ஏற்படவே ஏற்படாது. எல்லா வகுப்புகளுக்கும் பொதுவானகவர்ன்மெண்டானது அநீதியாய் நடத்தினுல்தான் வகுப்புச் சண்டைகள் அதிகரித்து வருகின்றன. கவர்ன்மெண்டு உத்தியோகங்களின் காரணமாகத்தான் இந்நாட்டில் வகுப்புச் சண்டைகள் தோன்றியுள்ளன. இவ் வகுப்புச் சண்டைகளுக்குக் கவர்ன்மெண்டு தான் காரணமென்று நான் சொல்லுகிறேன். கவர்ன்மெண்டானது, உத்தியோகங்களை எல்லா வகுப்பார்களுக்கும் அதனதன் ஜனத் தொகைக்குத் தக்கவாறு பகிர்ந்து கொடுத்து நீதி வழங்கி வருமானல் வகுப்புத்துவேஷமும் வகுப்புப் பொறாமையும் வகுப்புச் சண்டையும் ஏன் உண்டாகின்றன? உண்டாகவே உண்டாகாது. கவர்ன்மெண்டு வேண்டுமென்றே உத்தியோக நியமனங்களின் மூலம் பல்வேறுவகுப்புக்களையும் பிரித்தாண்டுகொண்டுவருகிறது. நாம் நம் உரிமையைத்தான் கேட்கின்றோம்.

நம் வகுப்பாருள் யாரும் கெட்டிக்காரராயும்யோக்கியதை வாய்ந்தவராயு மில்லையென்று சொல்லப்படுகிறது. இத்தகைய வார்த்தை நாம் ஒப்புக்கொள்ளமுடியாது. சர் அப்துர்ரஹீம் அவர்கள் சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜாக நியமிக்கப்பட்டபோது நம் மாகாணத்தில் நம்வகுப்பாரில் யோக்கியதைவாய்ந்தவரில்லாதிருந்தது உண்மைதான். ஆனால் இப்பொழுதோ நூற்றுக்கணக்கான முகமதியவக்கீல்கள் இருந்துகொண்டு வருகின்றனர். கெட்டிக்காரத்தனமும் யோக்கியதையும் வாய்ந்தவர்கள் நம் சமூகத்தில் தற்சமயம் அநேகரிருக்கின்றனர். ஆதலின் நம்முள் யாவருமில்லையென்றும் இருந்தாலும் சாமர்த்தியம் வாய்ந்தவர்களில்லையென்றும்சொல்லப்படுவதை நாம்ஒப்புக்கொள்ள முடியாது. இப்போது நியமனம் பெற்ற கனவான்களுக்கு மேல் சாமர்த்தியம் வாய்ந்தவர்களில்லாவிட்டாலும் அவர்களுக்குச் சமமான சாமர்த்தியம் வாய்ந்தவர்கள் நம் சமூகத்தில் அநேகரிருக்கின்றனர். அக் கனவான்களின் பெயர்களைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை யென்று நான் கருதுகிறேன். ஒரு குறிப்பிட்ட மனிதருக்கு உத்தியோகம் கொடுக்கும்படி நாம் கேட்கவில்லை. அதைப் பற்றி நமக்கு அக்கரையில்லை. நம்சமூகத்தில் சாமர்த்தியமுள்ள கல்வியுள்ள யாருக்காவது கொடுக்கும் படித்தான், நாம் கேட்கிறோம்.

நாம் நம் சமூகத்தின் உரிமைகளை காப்பாற்றிக்கொள்ள வேண்டி உத்தியோகங்கள் கேட்பது உத்தியோகவேட்டையாகுமா? ஒருக்காலு மில்லை. நாம் நம் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளக் கிளர்ச்சி செய்வது உத்தியோகவேட்டை—யானுல் இந்தியமயமாக்க வேண்டும் இந்தியமயமாக்க வேண்டும்என்று சொல்வது மாத்திரம் உத்தியோக வேட்டையல்லவோ? இந்து சமூகத்தினர் மட்டும்கவர்ன்மெண்டில்சர்வாதிகாரம்வகித்திருக்கநம்முகமதியசமூகம்மாத்திரம்கவர்ன்மெண்டில்ஒருபங்குமின்றி இண்டாடவா? சாமர்த்தியமும் யோக்கியதையும் இருப்பவர்களுக்குத் தான் உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் கவர்ன்மெண்டில் 100 க்கு இவ்வளவு உத்தியோகங்கள் வெள்ளைக்காரர்களுக்குக் கொடுத்தே தீர வேண்டும் என்னும் விதிக்கு அர்த்தமென்ன? படித்துவிட்டு உத்தியோகமில்லா வெள்ளைக்காரர்களுக்கு உத்தியோகம் கொடுப்பதற்காகத் தானே அந்த விதியிருக்கிறது? அதுபோலவே எங்கள் சமூகத்திலும் படித்துவிட்டு உத்தியோகமில்லாமலிருப்பவர்களுக்குத் தான்நாங்கள் உத்தியோகம்கேட்கிறோம். சகோதரர்களே இந்தக் கவர்ன்மெண்டும் இந்த கவர்ன்மெண்டுக்கு ஆலோசனை சொல்லிக்கொடுப்பவரும் நம் உரிமைகளைச் சட்டை செய்யவில்லை, நாம் ஒரு பெரிய ஏமாற்றத்தை அடைந்தோம். இதற்குக் காரணம் நாம் கிளர்ச்சிசெய்யாததே. நமது முஸ்லீம் லீக் தூங்கிக்கொண்டிருக்கிறது. இனி நமதுமுஸ்லீம் லீக் இடைப்புக் கட்டிக்கிளர்ச்சி செய்ய ஆரம்பிக்கவேண்டும். இனியாவது நாம் நமது உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சிசெய்யவேண்டும். கவர்ன்மெண்டு தன் கடமையைச் செய்யவில்லை. இந்த அநீதியை நாம் கண்டிக்க வேண்டும். ஸ்மால் காஸ் கோர்ட்டின் சீப் ஜட்ஜு ஒருவர் ஹைகோர்ட்டு ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த ஸ்தானத்திற்காவது நமது சமூகத்தினர் ஒருவரை நியமிக்கட்டும். அல்லது ஸ்மால்காஸ் கோர்ட்டிலுள்ள வேறு எந்த ஜட்ஜை யாவது சீப் ஜட்ஜாக நியமித்தால் அந்த ஜட்ஜு ஸ்தானத்திற்காவதுநம் சமூகத்தினரில் ஒருவரை நியமிக்கட்டும். அல்லது, இப்பொழுதுள்ள பிரெசிடென்ஸி மேஜிஸ்ட்ரேட் சீப் ஜட்ஜாக நியமிக்கப்படலாம் என்ற வதந்தி யிருக்கிறது. அது உண்மையானுல் காலியாகும் அந்த ஸ்தானத்திற்காவது முகமதியரொருவரை நியமிக்கட்டும். இதெல்லாம் இல்லையென்றால் கவர்ன்மெண்டு பிளீடராகவாவது நியமிக்கட்டும். இத்துடன் என் பிரசங்கத்தைமுடித்துக்கொண்டு இத்தீர்மானத்தை அங்கீகரிக்குமாறு உங்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். (கை தட்டல்)

பின்னர் தீர்மானம் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறிற்று. சபைத் தலைவர் முதலியவர்களுக்குவந்தனோபசாரம் கூறப்பட்டபின் கூட்டம் 8மணிக்கு இனிது முடிவு பெற்றது.

மோட்டார் போக்குவரத்து.

அரசாங்கத்தின் சிரத்தை.

உதகமண்டலம், மே, 7—

வண்டிப் போக்குவரத்து ஒழுங்கு முறையைக் கவனித்து, மோட்டாரினல் ஏற்படும் சேதங்களைத் தடைபண்ணக் கவர்ன்மெண்டார் கவலை கொண்டுள்ளார். வருகிற வாரத்தில் ஒரு சபை கூட்டி அதில் சட்ட மெம்பர் அவர்களையும் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலையும், இவ்விஷயத்தில் பழக்கம் கொண்டுள்ளவர்களையும் வரவழைத்து, யோசனை கடப்பித்[illegible]

சென்னை கார்ப்பொரேஷன் விளம்பரம்

1925—1926.ம் வருஷத்தில் 24. [illegible] 26, 27-வது டிவிஷன்களிலும் 192[illegible] 1927.ம் வருஷத்தில் 28. 29, 30 வது டிவிஷன்களிலும் கட்டாயமான இலவச மூலாதார பாலபோதப் படிப்பு சென்னை பட்டணத்தில் ஏற்படுத்தப்பட்ட தென்பதை சென்னை வாசிகளுக்கு இதன் மூலமாய் ஞாபகப்படுத்துகிறோம். இது விஷயமாக இந்நகர் வாசிகள் ஒத்துழைத்ததற்காகவும், பிள்ளைகள் சரியாக வருகிறார்களா என்பதைக் கவனிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட விசாரணைச் சபைகளின் அங்கத்தினர்கள் இவ்விஷயத்தில் எடுத்துக் கொண்ட சிரத்தைக்காகவும் வந்தனம்.

ஒரு வருஷத்திற்கு ஒரு முறையாவது அல்லது அவசியமானுல் இன்னும்குறைந்த இடைக் காலங்களிலாவது கட்டாயப்படிப்பு ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு டிவிஷனிலும் பள்ளிக்கூடத்திற்கு கட்டாயம் அனுப்பப்படவேண்டிய வயதுள்ள பிள்ளைகள் எத்தனைபேர் இருக்கிறார்கள், 6 வயதிலிருந்து 11 வயதுவரைக்கும் உள்ள மகமதியரல்லாத ஆண் பிள்ளைகள் எத்தனை 8, லிருந்து 13ஆவது வயதுவரைக்குமுள்ள மகமதிய ஆண்பிள்ளைகள் எத்தனை. 5 லிருந்து 10 வயதுவரைக்குமுள்ள பெண் பிள்ளைகள் எத்தனை, எவ்வளவுபேர் பள்ளிக்கூடங்களுக்கு வருகிறார்கள், எவ்வளவுபேர்சட்டத்துக்கு விரோதமாக நடக்கின்றார்கள் என்ன காரணங்களால் இவ்விதம்செய்கின்றார்கள் என்பவற்றைத் திட்டமாக கண்டு பிடிப்பதற்காக பிள்ளைகளின் பொதுக் கணக்கு எடுக்க வேண்டியதாயிருக்கிறது. அந்தக் கணக்கை ராஜாங்கத்தாருக்கு அனுப்பவேண்டியதாயிருக்கிறது. மே மாதத்தில் கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடங்களில் வேலைபார்க்கும் உபாத்தியாயர்கள் மேற்கண்ட விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்காக வீட்டுக்கு வீடு வருவார்கள். இந்நகர வாசிகள் அவர்களுக்கு வேண்டிய எல்லா சமாசாரங்களையும் கொடுத்து உதவிபுரியுமாறு மிகவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பள்ளிக்கூடங்களுக்கு வராமல் நீக்கிவிடப்படுவதற்கு உத்தரவு பெற்றவர்கள் தவிர, பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பப்படாமல் இருக்கும் மற்ற பிள்ளைகளின் தாய் தந்தையர் தண்டனைக்குள்ளாவார்கள். அப்பேர்ப்பட்ட தாய் தந்தையர் தங்கள் பிள்ளைகளை சீக்கிரமாக பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி, தங்களுக்குச் சம்மதமில்லாத தண்டனைக்குரிய நடவடிக்கைகளுக்கு இடம் கொடுக்காதிருப்பார்களென்று ஆவலுடன் நம்பப்படுகிறது.

சென்னை முதல் 23 டிவிஷன்களிற் குடியிருப்பவர்களுக்கு இதனால் அறிவிப்பது யாதெனில், இவ்வருஷம் அக்டோபர் மாதம் 1தேதி முதல் அந்த டிவிஷன்களில் மூலாதார ஆரம்பக் கல்வி கட்டாயப்படுத்தப்படும். 1920ம் வருஷத்திய மூலாதார ஆரம்பக்கல்வி சட்டப்படி, 6 வயதிலிருந்து 11 வயதுக்குட்பட்ட மகமதியரல்லாத பிள்ளைகளும், 8 லிருந்து 13 வயதிற்குட்பட்ட மகமதியப்பிள்ளைகளும், 5 லிருந்து 10வயதிற்குட்பட்டபெண் பிள்ளைகளுமான எல்லாப் பிள்ளைகளும் அங்கீகாரம் பெற்ற பாடசாலைக்கு அனுப்பப்பட வேண்டும். பெற்றோரும்போஷகரும் தங்கள் பிள்ளைகளைக் குறிப்பிட்டுள்ள வயதில் அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளுக்கு அனுப்பாவிட்டால் தண்டனைக் குள்ளாவார்கள் கார்பொரேஷன் பள்ளிக்கூட பிள்ளைகளின் சங்கியைக் கணக்கிடுவதற்காக மே மாதத்தில் வீட்டுக்கு வீடு சுற்றிவருவார்கள் அப்போது எல்லா ஜனங்களும் அவர்களுக்கு வேண்டிய விஷயங்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தற்சமயம் சென்னை கார்ப்பொரேஷன் ஆண்பிள்ளைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்குமாக ஏற்பட்ட 100 பள்ளிக்கூடங்களை உடைத்தாயிருக்கிறது இப்பள்ளிக் கூடங்களில் 18,200 பிள்ளைகளுக்கு கல்விபுகட்டி வருகிறார்கள் தவிரஇன்னும் அநேகபாடசாலைகளும் வேண்டியபோது திறக்கப்படும் மூலாதார ஆரம்பக் கல்வியைக் குறிப்பிட்ட காலத்தில் முடித்தபிறகு ஜீவனத்திற்குரிய தொழில்களைக் கற்றுக் கொள்ள விரும்பும் ஆண்பிள்ளைகளுக்குத் தச்சு வேலை நெசவுத் தொழில் சித்திரத்தையல் வேலை தையல் வேலை பாய் பின்னல் முதலியன போன்றத் தொழில்கள் கற்பிக்கப்படும் பாடசாலைகள் சிலவற்றில் பிள்ளைகள் பொது அறிவிலேயும், கைத்தொழில் பழக்கத்திலேயும் அதிக அறிவை அபிவிர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு பிரதமக் கல்வியைக் கற்பிக்க 6 முதல் 8 வகுப்புவரையில் சீக்கிரம் திறக்கப்படும், பெண்பிள்ளைகளுக்குபிரத்தியேகமாய் சங்கீதமும், பின்னல் வேலையும் குடும்ப நிர்வாக விஷயமும் கற்பிக்கப்பட்டு வருகின்றன. ஆகையால் பள்ளிக்கூடம் போகும் வயதுடைய பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வேண்டுமென்று பலாத்காரம் செய்வதற்கு முன்னே பாடசாலைக்கு அனுப்பும்படியாக குடிகள் யாவரும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

J. வெங்கட்ட நாராயண B. A. B. L.
கமிஷனர்.
சென்னை கார்ப்பொரேஷன்.

குடி அரசு.

ஒரு சிறந்த வாரப்பத்திரிகை.

[illegible] வெளிவருவது.

ஆசிரியர்.—

திரு ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

இது பிராமணரல்லாதாரின் விடுதலைக்கு உழைப்பது.

சந்தா முன்பணம் (வருடம்)	ரூ 3—0—0
6 மாத சந்தா	ரூ 1—12—0
வெளிநாடு (வருடம்)	ரூ 4—0—0

"திராவிடன்" சந்தா.

சென்னையிலும் நம் ஏஜண்டு உள்ள இடங்களிலும்			
மாதமொன்றுக்கு ரூபாய்	1	0	0
தனிப்பிரதி	0	0	6
மற்ற இடங்களில்	1	6	0
தனிப்பிரதி	0	1	0
வெளிநாடுகளுக்கு	1	12	0
தனிப்பிரதி	0	1	6

ஆகலான்

எல்லோரும் சந்தாதாராய்ச் சேருங்கள்.

சந்தா முன்பணம் கட்டி பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டியது.

பார்ப்பனரல்லாத காப்பி ஓட்டல்களை ஏற்படுத்துங்கள். அதற்குத்தகுந்த முறையில் வாலிபர்களைப் பயிற்சி செய்யுங்கள்.

தர்ப்பை புல்லுக்குத் தாரு கொடுத்தால் இறந்தவர்கள் மோட்சலோகம் போய் சேருவர்கள் என்ற மூடநம்பிக்கையை ஒழியுங்கள்! ஒழியுங்கள்!!

சுயராஜ்யத்துக்கு வழியாது?

சுயமரியாதையே

அதன் கொள்கைகள்

1. நம்மை எல்லோரையும் படைத்த கடவுள் ஒருவரே.
2. நாம் எல்லோரும் சகோதரர்கள்.
3. கோவில்களில் எல்லோரும் சேர்ந்து கடவுளை வழி படுங்கள்.
4. சாதி வித்தியாசத்தை ஒழியுங்கள்.
5. சகோதரர்களுடன் உட்கார்ந்து சாப்பிடுங்கள்.
6. சம்பந்தி போஜனமே சமத்துவத்திற்கு வழி.
7. சமத்துவமே சுயராஜ்யம்.
8. கடவுளுக்கும் நமக்கும் தரகர் வேண்டாம்.
9. நீங்களே தேங்காய் உடைத்து பழம்வைத்து கற்பூர ஆராதனை செய்யுங்கள்.
10. அடிமைப் புத்தியை ஒழியுங்கள். மனோ விடுதலை அடையுங்கள். தேசத்தைவிடுதலை செய்யுங்கள்.
11. தர்ப்பை புல்லிற்கு காசு கொடுத்தால், இறந்தவர்கள் மோட்சலோகம் போவார்களென்ற மூட நம்பிக்கையை ஒழியுங்கள்.
12. உங்களுக்கு இறந்தவர்களிடத்தில் அனுதாபமிருந்தால் உங்களைச் சேர்ந்தபந்துக்களுக்கும் மற்ற ஏழைகளுக்கும் விருந்திடுங்கள்.
13. கல்யாண சுப துக்க காரியங்களுக்கு பிராமணியத்தை முற்றும் ஒழியுங்கள். உங்களைச்சேர்ந்த பெரியோர்களைவைத்து நடத்துங்கள். வீண் டம்பச்செலவு செய்யாதீர்கள்.
14. நீங்கள் கட்டிவைத்த கோவில்களில் கடவுள் விக்கிரகங்களை அருகில் போய்பார்க்க உங்களுக்கு உரிமைகிடையாதா?
15. சூத்திரன் என்றால் அடிமை. அடிமைத்தனத்தை ஒழிப்பதுதான் உங்களுடையசுயமரியாதை.
16. பார்ப்பனர்களுக்கு இடம்வேறு. உங்களுக்கு இடம்வேறு என்ற வித்தியாசமிருக்கிற காப்பி, சாப்பாடு ஓட்டல்களுக்கு போகாதீர்கள்.
17. பார்ப்பனரல்லாத இந்து, மகமதிய, கிருஸ்தவ சகோதரர்கள் ஓட்டல்களில்ஒன்றாயிருந்து ஒற்றுமையுடன் சாப்பிட பார்ப்பனர்களுக்குமட்டும் தனி இடம் ஏன்?
18. உங்களை எந்த ஓட்டல்களில் சமத்துவமாய் நடத்துகிறார்களோ அந்த ஓட்டல்களுக்குச் செல்லுங்கள்.
19. பார்ப்பனரல்லாதார் ஓட்டல்களை ஏற்படுத்துங்கள். அதற்கு தகுந்த முறையில் வாலிபர்களைப் பயிற்சிசெய்யுங்கள்.
20. தீண்டாமையென்ற பேயை நமது தேசத்தை விட்டுத்துரத்துங்கள்.
21. வீதியிற்செல்ல நாய், பன்றிகளுக்கு உரிமை யிருக்கும்பொழுது நமது மானிட சகோதரர்களுக்கில்லையா?
22. தண்ணீர் பந்தல்களில் எல்லாசகோதரர்களுக்கும் பாத்திரத்தில் தண்ணீர் கொடுங்கள். கையிலாவது மூங்கில் குழாய்கள்வழியாகவது தண்ணீர் வார்க்கும் வழக்கத்தை நிறுத்துங்கள்.
23. கோவில்களில் எல்லோருக்கும் சமத்துவமாக பிரசாதங்களை வழங்குங்கள். சிலவகுப்பினர்களுக்கு முன்னும், சிலவகுப்பினர்களுக்கு பின்னும், சிலவகுப்பினர்களை உட்காரவைத்தும், சிலவகுப்பினர்களை நிற்கவைத்து பிரசாதம் கொடுப்பதை நிறுத்துங்கள்.
24. கோவில்களில் தேவாரம், திருவாசகங்களை சதா பக்தர்கள் காதுகளில் கேட்கும்படி செய்யுங்கள்.
25. உங்களுடைய சுயமரியாதைக்கு போராடுகின்ற "குடி அரசு", "திராவிடன்" "ஜஸ்டிஸ்" போன்ற பத்திரிகைகளை வாங்கிப்படியுங்கள்.